பணிக்குழுவும் கூட்டமைப்பில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது என்பதை நாம் அறிவோம். மக்கள் நிறைவாக வாழவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாடும் மக்களுக்குச் சில உரிமைகளை வழங்கியுள்ளது. இந்திய நாட்டு அரசியல் சாசனம் ஒவ்வொரு மனிதனும் நலமாகவும் மாண்புடனும் வாழவேண்டும் என்பதனை அடிப்படை உரிமையாக வகுத்துள்ளது. உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவம், வேலை ஆகிய அடிப்படை உரிமைகள் அதில் அடங்குகின்றன. ஆனால் இந்த அடிப்படை உரிமைகள் கூட சாதாரண மனிதர்களுக்கு, அதிலும் குறிப்பாக எல்லாப் பெண்களுக்கும் கிடைப்பதில்லை என்பதே இன்றைய இந்திய நாட்டின் நிலை.

### அடிப்படை உரிமைகள்

அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் கல்வியிலும் மிகவேகமாக வளர்ந்துவரும் இந்தியாவில், 12 விழுக்காடுக்கும் அதிகமான பெண்கள் உண்ண உணவின்றிப் பசியோடு படுக்கைக்குச் செல்கின்றார்கள் என்பது வெட்கப்பட வேண்டிய ஓர் உண்மை. 60 விழுக்காடு பெண்கள் இரத்தசோகைக்கு ஆளாகியுள்ளனர். இதில் 55 விழுக்காடு தாய்மைப் பேறடைந்த நிலையில் இருக்கும் பெண்கள். இதனால் குழந்தைகள் எடை குறைவாகப் பிறக்கின்றனர். ஒரு வயதை அடைவதற்குள் சுமார் 15 இலட்சம் குழந்தைகளும் 5 வயதை எட்டுவதற்குள் 5 இலட்சம் குழந்தைகளும் இறந்துவிடுகிறார்கள். வைட்டமின் குறைபாட்டினால் ஏராளமான குழந்தைகள் கண்பார்வையற்றுப் போய்விடுகின்றனர். அடிப்படைப் பொருளாதார வலுவின்மையால்தான் இந்த அவலநிலை இந்தியாவில் இன்னும் நீடித்து வருகின்றது. எனவே, பெண்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டிய தேவை அவசியமாகிறது.

### வன்முறைகள்

பொருளாதார ரீதியில் மட்டுமன்றி, பாலியல் ரீதியாகவும், தாங்கள் பணியாற்றும் நிறுவனங்களிலும், ஏன் கல்விநிலையங்களில் கூட அண்மைக் காலங்களில் பெண்களின் பாதுகாப்பு பெரும் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. பெண் குழந்தைகள் கடத்தப்படுதல், பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்படுதல், இளம் பெண்களின் ஆணவக்கொலைகள், ஓர் ஆணின் விருப்பத்திற்கு இசையவில்லை என்ற காரணத்தினால் ஆசிட் வீச்சுக்கள், வன்கொலைகள் எல்லாம் அன்றாட செய்தி ஊடகங்களிலிருந்து நாம் அறிகிறோம். அவை நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றன. இச்சூழலில் பெண்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்ற கோரிக்கைகள் நமது கோரிக்கைகளாக மாறவேண்டும்.